DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,
KRISHNAGIRI.

| | | |
|---|---|---|
| Sessions | : | SC. No. 111 of 2021 |
| Deposition of witness for | : | PW6 |
| Name | : | வெங்கடேசன் |
| Father's Name | : | அனுமந்தன் |
| Village | : | போத்திநாயனப்பள்ளி |
| Taluk | : | கிருஷ்ணகிரி |
| District | : | கிருஷ்ணகிரி |
| Profession | : | – |
| Age | : | 56 |

Solemnly affirmed in accordance with the provisions of Act 44 of 1969 of the 20th day of June 2025.

1 முதல் 4 எதிரிகள் ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பெயரில் விசாரிக்கப்பட்டார்.

<u>முதல் விசாரணை :–</u>

நான் தற்போது போதிநாயனப்பள்ளி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையெழுத்து என்னுடையது தான். அந்த பார்வை மகசர் **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி கையெழுத்தை நான் கடந்த 08.11.2019 ஆம் தேதி காலை சுமார் 08.00 – 08.30 மணியளவில் நானும் ராமமூர்த்தி என்பவரும் இரு சக்கர வாகனத்தில் மகாராஜா கடை சென்று விட்டு வேப்பனப்பள்ளியில் உள்ள ராமமூர்த்தியின் உறவினர் வீட்டிற்கு சென்று கொண்டிருந்த போது, சக்கனாவூருக்கு செல்லும் வழியில் உள்ள நிழற்கூடம் அருகே வைத்து போலீசாரிடம் செய்து கொடுத்தேன். அங்கு போலீசார் வரைபடம் வரைந்து கொண்டிருந்தார்கள். நாங்கள் அங்கே சென்றோம். வி.கிருஷ்ணன் என்பவருக்கு அடிபட்டது சம்பந்தமாக என்னிடம் கையெழுத்து கேட்டார்கள். என்னை விசாரித்து தான் போலீசார் கையெழுத்து பெற்றார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :–

வெற்றுத்தாளில் கையெழுத்து செய்து கொடுத்தீர்களா என்றால் இல்லை, எழுதிய பேப்பரில் தான் கையெழுத்து செய்தேன். நீங்கள் போவதற்கு முன்பே அந்த ஆவணம் தயார் செய்யப்பட்டிருந்ததா என்றால் இல்லை. அதில் என்ன எழுதியிருந்தது என்ற விவரம் உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியும். நீங்கள் அந்த இடத்திற்கு செல்லவும் இல்லை, வி.கிருஷ்ணன் உங்களுக்கு வேண்டப்பட்டவர் என்பதால் போலீசாருக்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறீர்கள் என்றால் சரியல்ல. நீங்கள் படித்து பார்த்த ஆவணம் டைப் செய்யப்பட்டிருந்ததா அல்லது கையால் எழுதப்பட்டிருந்ததா என்றால் கையால் எழுதப்பட்டிருந்தது. 08.11.2019 அன்று கையெழுத்து செய்ததாக சொல்வது தவறு, 09.11.2019 அன்று உங்களை காவல் நிலையம் வரவழைத்து தான் போலீசார் உங்களிடம் கையெழுத்து பெற்றுள்ளார்கள் என்றால் சரியல்ல. உண்மையில் நீங்கள் கையெழுத்து செய்திருந்தால் சரியான நேரத்தையும், தேதியையும் குறிப்பிட்டு சொல்லி இருப்பீர்கள் என்றால் சரியல்ல. நீங்கள் அடிக்கடி காவல் நிலையத்தில் சென்று வந்ததால், எழுதாத பேப்பரில் தான் போலீசார் உங்களிடம் கையெழுத்து வாங்கினார்கள், தற்போது உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. வி.கிருஷ்ணன் என்பவர் உங்கள் ஊர்க்காரர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்கிறீர்கள் என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் யார் யார் இருந்தார்கள் என்ற விவரம் உங்களுக்கு தெரியுமா என்றால் இன்ஸ்பெக்டர், இரண்டு காவலர்கள், ஆடு மாடு மேய்ப்பவர்களும் உடன் இருந்தார்கள். கையெழுத்து வாங்குவதாக இருந்தால் அங்கிருக்கும் ஆடு, மாடு மேய்ப்பவர்களிடமே வாங்கியிருப்பார்கள், உங்களிடம் காவல் நிலையத்தில் வைத்து தான் கையெழுத்து வாங்கினார்கள், நீங்கள் உண்மையை மறைத்து பொய் சொல்கிறீர்கள் என்றால் சரியல்ல.

மறு விசாரணை :–

இல்லை.

ஒம் /– திரு.இரா.கோகுலகிருஷ்ணன்,
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணகிரி.

DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,
KRISHNAGIRI.

| | | |
|---|---|---|
| Sessions | : | SC. No. 111 of 2021 |
| Deposition of witness for | : | PW7 |
| Name | : | ராமமூர்த்தி |
| Father's Name | : | கிருஷ்ணப்பா செட்டி |
| Village | : | மேலச்சின்னப்பள்ளி |
| Taluk | : | கிருஷ்ணகிரி |
| District | : | கிருஷ்ணகிரி |
| Profession | : | – |
| Age | : | 69 |

Solemnly affirmed in accordance with the provisions of Act 44 of 1969 of the 20th day of June 2025.

எதிரி ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பெயரில் விசாரிக்கப்பட்டார்.

<u>முதல் விசாரணை :–</u>

நான் தற்போது M.C.பள்ளி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.6 வெங்கடேசன் எனது நண்பர் ஆவார். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையெழுத்து என்னுடையது தான். அந்த கையெழுத்து **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி கையெழுத்தை நான் கடந்த 09.11.2019 அன்று காலை 08.00 – 08.30 மணியளவில் மகாராஜா கடையிலிருந்து வேப்பனப்பள்ளிக்கு செல்லும் வழியில் சக்கனாவூரிலிருந்து வேப்பனப்பள்ளி பிரியும் ரோட்டின் அருகே இருக்கும் பேருந்து நிறுத்தத்தில் வைத்து செய்து கொடுத்தேன். அங்கு போலீசார் வரைபடம் வரைந்து போதிநாயனப்பள்ளி வி.கிருஷ்ணன் என்பவரை சில பேர் அடித்தது சம்பந்தமாக விசாரிப்பதாக சொல்லி கையெழுத்து வாங்கினார்கள். இவ்வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :–</u>

அ.சா.6 வெங்கடேசனும் நீங்களும் நண்பரா என்றால் ஆமாம்.

அவருடன் தான் நீங்கள் வண்டியில் போனீர்களா என்றால் ஆமாம். எந்த தேதியில் இருவரும் போனீர்கள் என்றால் 18 ஆம் தேதி. நீங்கள் எழுதாத பேப்பரில் தான் கையெழுத்து செய்தீர்கள் என்றால் சரியல்ல. அதில் என்ன எழுதியிருந்தது என்ற விவரத்தை படித்து பார்த்தீர்களா என்றால் படித்து பார்த்தேன். நீங்கள் படித்து பார்த்த ஆவணம் டைப் செய்யப்பட்டிருந்ததா அல்லது கைப்பட எழுதப்பட்டிருந்ததா என்றால் ஞாபகம் இல்லை. எத்தனை பக்கங்கள் எழுதப்பட்டிருந்தது என்றால் ஞாபகம் இல்லை, கையெழுத்து போடச் சொன்னார்கள், போட்டேன். நீங்கள் உண்மையில் கையெழுத்து செய்திருந்தால் சரியான நேரத்தையும், தேதியையும் சொல்லி இருப்பீர்கள், வெங்கடேசன் ஒரு தேதியையும், நீங்கள் ஒரு தேதியையும் மாற்றி மாற்றி சொல்கிறீர்கள் என்றால் சரியல்ல. கையெழுத்தை காவல் நிலையத்தில் வைத்து தான் செய்து கொடுத்தீர்கள் என்றால் ஆமாம்.

<u>மறு விசாரணை :–</u>

இல்லை.

ஒம் /– திரு.இரா.கோகுலகிருஷ்ணன்,
தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணகிரி.